Prepp
Your Personal Exams Guide



1. பொருந்தாததைத் தேர்வு செய்க.

(A) அகழி (B) கேணி (C) ஊருணி (D) மலை

2. 'இரட்டைக் காப்பியங்கள்' என்றழைக்கப்படுவன

(A) சிலப்பதிகாரமும் மணிமேகலையும்

(B) சிலப்பதிகாரமும் சீவகசிந்தாமணியும்

(C) வளையாபதியும் குண்டலகேசியும்

(D) மணிமேகலையும் வளையாபதியும்

3. 'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் நூலின் ஆசிரியர் யார் ?

(A) வல்லிக்கண்ணன் (B) புதுமைப்பித்தன்

(C) ந. பிச்சமூர்த்தி (D) கு. அழகிரிசாமி

4. வாக்கியம் I : 'கத்தியின்றி ரத்தமின்றி' என்னும் பாடலைப் பாடியவர் நாமக்கல் கவிஞர்.

வாக்கியம் II : நாமக்கல் கவிஞர் நேருவின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர்.

(A) I மட்டும் சரி (B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி (D) I மற்றும் II தவறு

5. தேவராட்டத்திற்கான இசைக்கருவி எது ?

(A) தவில் (B) சிங்கி

(C) தேவதுந்துபி (D) டோலக்

6. பொருத்துக.

I. குறிஞ்சி — a. சேர்ப்பன்

II. முல்லை — b. ஊரன்

III. மருதம் — c. தோன்றல்

IV. நெய்தல் — d. வெற்பன்

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | a | b | d | c |
| (B) | d | c | b | a |
| (C) | a | b | c | d |
| (D) | b | d | a | c |

Prepp
Your Personal Exams Guide



7. குடியரசு தலைவர் விருது பெற்ற ஜெயகாந்தனின் படைப்பு எது ?

(A) சில நேரங்களில் சில மனிதர்கள்

(B) உன்னைப்போல் ஒருவன்

(C) இமயத்துக்கு அப்பால்

(D) சுந்தர காண்டம்

8. "இலகு கவிதை, கட்டற்ற கவிதை, விலங்குகள் இலாக் கவிதை, கட்டுக்குள் அடங்காக் கவிதை" என்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்ட கவிதை வடிவம் எது ?

(A) மரபுக்கவிதை
(B) விருத்தப்பா
(C) புதுக்கவிதை
(D) தொடர்நிலைச் செய்யுள்

9. சேர்த்து எழுதுக – வான் + ஒலி

(A) வானாலி
(B) வானம் ஒலி
(C) வானொலி
(D) வாணலி

10. விருத்தப்பாக்களால் இயற்றப்பட்ட முதல் காப்பியம் எது ?

(A) சிலப்பதிகாரம்
(B) வளையாபதி
(C) சீவகசிந்தாமணி
(D) கம்ப இராமாயணம்

11. 'இஸ்மத் சன்னியாசி' என்னும் பட்டத்தைப் பெற்றவர் யார் ?

(A) வீரமாமுனிவர்
(B) நாகூர்ரூமி
(C) குமரகுருபரர்
(D) உமறு புலவர்

12. இஸ்ரோவின் ஒன்பதாவது தலைவர் யார் ?

(A) அப்துல் கலாம்
(B) மயில்சாமி
(C) சிவன்
(D) வளர்மதி

'சிறுகதை மன்னன்' என்று போற்றப்படுபவர் யார் ?

(A) ஜெயகாந்தன்
(B) அ. வெண்ணிலா
(C) கோமகள்
(D) புதுமைப்பித்தன்

14. 'சிலேடை' என்பது எந்த அணியின் வேறுபெயர் ?

(A) பிறிது மொழிதல் அணி

(B) இரட்டுறமொழிதல் அணி

(C) வேற்றுமை அணி

(D) சொற்பொருள் பின்வருநிலை அணி

15. 'மதுரை பதிற்றுப்பத்தந்தாதி' என்னும் நூலின் ஆசிரியர் யார் ?

(A) வீரமாமுனிவர் (B) மயிலை நாதர்

(C) பரஞ்சோதி முனிவர் (D) குமரகுருபரர்

16. 'புதுக்கவிதையின் தந்தை' என்று போற்றப்பட்டவர் யார் ?

(A) வல்லிக்கண்ணன் (B) ந. பிச்சமூர்த்தி

(C) சுரதா (D) பாரதிதாசன்

17. 'கருந்துளை' என்ற சொல்லையும் கோட்பாட்டையும் முதலில் குறிப்பிட்டவர் யா

(A) கலிலியோ (B) நியூட்டன்

(C) ஜான் வீலர் (D) ஸ்டீபன் ஹாக்கிங்

18. வாக்கியம் I : ஒரே நேரத்தில் பத்து வேலைகளைச் செய்யக் கூடியவர்கள் சதாவதா

வாக்கியம் II : ஒரே நேரத்தில் நூறு வேலைகளைச் செய்யக் கூடியவர்கள் சதாவதா

(A) I மட்டும் சரி (B) II மட்டும் சரி

(C) I மற்றும் II சரி (D) I மற்றும் II தவறு

19. 'ரோபோ' என்பதன் பொருள் யாது ?

(A) இயந்திரம் (B) தானியங்கி

(C) பொம்மை (D) அடிமை

20. 'குற்றியலுகரம்' – பிரித்து எழுதுக.

(A) குற்றி + அல் + கரம் (B) குறுமை + இயல் + இகரம்

(C) குறுமை + இயல் + உகரம் (D) குற்றியல் + கரம்

21. மாணவர்கள் கல்வியோடு கைத்தொழில், வேளாண்மை, தையல், மரம் வளர்த்த
போன்றவற்றையும் கற்க வேண்டும் என்று வலியுறுத்தியவர் யார் ?

(A) பெரியார் (B) அம்பேத்கர்

(C) காந்தியடிகள் (D) அயோத்திதாசர்

22. 'கூலம்' என்பதன் பொருள் யாது ?

(A) பொன் (B) தானியம்

(C) குளம் (D) ஆறு

Prepp
Your Personal Exams Guide

C



23. "தாவோயியம்" என்ற சிந்தனைப் பிரிவைச் சார்ந்தவர் யார் ?

(A) லாவோட்சு (B) அரவிந்தர்
(C) தாகூர் (D) கன்பூசியஸ்

24. தமிழின் முதல் அகராதி நூல் எது ?

(A) நன்னூல் (B) தண்டியலங்காரம்
(C) சதுரகராதி (D) பேரகராதி

25. தமிழ், கன்னடம், மலையாளம் ஆகியன

(A) நடுத்திராவிட மொழிகள் (B) வடதிராவிட மொழிகள்
(C) தென்திராவிட மொழிகள் (D) வட இந்திய மொழிகள்

26. வேளாண்மை செழிக்கவும் மானுடம் தழைக்கவும் ________ திங்களில் பொன்ஏர் பூட்டுதல் தமிழர் பண்பாட்டின் மகுடம்.

(A) தை (B) சித்திரை
(C) ஆடி (D) பங்குனி

27. கவியரசு கண்ணதாசனின் இயற்பெயர் என்ன ?

(A) முத்தையா (B) இராமையா
(C) சுப்பையா (D) கருப்பையா

28. கம்பருக்குத் தொடர்பில்லாத நூல் எது ?

(A) ஏரெழுபது (B) சிலை எழுபது
(C) இராவண காவியம் (D) திருக்கை வழக்கம்

29. மணிமேகலையை இயற்றியவர் யார் ?

(A) இளங்கோவடிகள் (B) திருத்தக்க தேவர்
(C) சீத்தலைச் சாத்தனார் (D) தோலாமொழித் தேவர்

30. சுயமரியாதை இயக்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு எது ?

(A) 1947 (B) 1950
(C) 1925 (D) 1920

Prepp
Your Personal Exams Guide



46. பெண்பாற் பிள்ளைத்தமிழின் இறுதி மூன்று பருவங்கள் யாவை ?

(A) காப்பு, செங்கீரை, தால்
(B) கழங்கு, அம்மானை, ஊசல்
(C) சிற்றில், சிறுபறை, சிறுதேர்
(D) முத்தம், வருகை, அம்புலி

47. பொருத்தமான இணையைத் தேர்வு செய்க.

(A) தமிழோவியம் – தமிழ் ஒளி
(B) பட்டமரம் – ஈரோடு தமிழன்பன்
(C) பெரியபுராணம் – சேக்கிழார்
(D) தண்ணீர் – ஜெயகாந்தன்

48. 'தண்டமிழ் ஆசான்', 'நன்னூற் புலவன்' என்று இளங்கோவடிகள் யாரைப் பாராட்டியுள்ளார் ?

(A) திருத்தக்க தேவர்
(B) தோலாமொழித் தேவர்
(C) சீத்தலைச் சாத்தனார்
(D) கம்பர்

49. 'மலைபடுகடாம்' நூலுக்கு வழங்கும் வேறுபெயர் ?

(A) திருமுருகாற்றுப் படை
(B) சிறுபாணாற்றுப் படை
(C) கூத்தராற்றுப் படை
(D) பெரும்பாணாற்றுப் படை

50. உலக மொழிகளில் தொன்மையான மொழி எது ?

(A) தமிழ்
(B) கன்னடம்
(C) தெலுங்கு
(D) மலையாளம்

51. 'சுப்புரத்தினம்' என்னும் இயற்பெயர் கொண்ட கவிஞர் யார் ?

(A) பாரதியார்
(B) பாரதிதாசன்
(C) கவிமணி தேசிய விநாயகம்
(D) நாமக்கல் கவிஞர்

52. 'தமிழ்விடுதூது' ________ என்னும் இலக்கியவகையைச் சேர்ந்தது.

(A) தொடர்நிலைச் செய்யுள்
(B) புதுக்கவிதை
(C) தனிப்பாடல்
(D) சிற்றிலக்கியம்

53. 'நீரின்று அமையா யாக்கைக்கு எல்லாம்' என்னும் அடியில் உள்ள 'யாக்கை' என்னும் சொல்லின் பொருள் யாது ?

(A) உயிர்
(B) உலகம்
(C) உடம்பு
(D) உறவு

prepp
Your Personal Exams Guide

54. 'திருவெம்பாவை' என்ற நூலை இயற்றியவர் யார் ?

(A) திருஞான சம்பந்தர்
(B) திருநாவுக்கரசர்
(C) சுந்தரர்
(D) மாணிக்க வாசகர்

55. 'காந்தியக் கவிஞர்' என்று அழைக்கப்படுபவர் யார் ?

(A) நாமக்கல் கவிஞர்
(B) காமராசர்
(C) கவிமணி
(D) கண்ணதாசன்

56. 'திரிகூடமலை' என்பது எம்மலையைக் குறிக்கிறது ?

(A) நீல மலை
(B) கொல்லி மலை
(C) குற்றால மலை
(D) விராலி மலை

57. 'பரமார்த்த குருகதை' என்னும் நூலின் ஆசிரியர் யார் ?

(A) கி. ராஜநாராயணன்
(B) ஜெயகாந்தன்
(C) கு.ப. ராஜகோபாலன்
(D) வீரமாமுனிவர்

58. "நாளிகே ரஞ்செ ருந்தி நறுமலர் நரந்தம் எங்கும்" – இவ்வடியில் நாளிகேரம், நா
என்னும் சொற்கள் முறையே எந்தெந்த மரங்களைக் குறிப்பிடுகிறது ?

(A) தென்னைமரம், நாரத்தைமரம்
(B) அரசமரம், ஆச்சாமரம்
(C) சந்தனமரம், நாகமரம்
(D) பூவரசுமரம், சந்தனமரம்

59. 'மலைக் கள்ளன்' என்ற நூலின் ஆசிரியர் யார் ?

(A) கண்ணதாசன்
(B) நாமக்கல் கவிஞர்
(C) பாரதிதாசன்
(D) வாணிதாசன்

60. "தம் மக்கள் மெய் தீண்டல் உயிர்க்கு இன்பம்" என்று கூறியவர் யார் ?

(A) நா. முத்துக்குமார்
(B) திருவள்ளுவர்
(C) பாரதியார்
(D) வாணிதாசன்

61. மாற்றரசனின் கோட்டையைக் கைப்பற்றுவது

(A) வாகைத் திணை
(B) நொச்சித் திணை
(C) தும்பைத் திணை
(D) உழிஞைத் திணை

Prepp
Your Personal Exams Guide



62. பாலைத் திணைக்கான பறை எது ?

(A) ஏறு கோட்பறை
(B) மணமுழா
(C) துடி
(D) தொண்டகம்

63. கீழ்க்கண்ட நூல்களுள் 'திரிகூடராசப்பக் கவிராயர்' இயற்றிய நூலைக் குறிப்பிடுக.

(A) பெத்லகேம் குறவஞ்சி
(B) குற்றாலக் குறவஞ்சி
(C) முத்துக்குமாரசுவாமிப் பிள்ளைத்தமிழ்
(D) திருமலை முருகன் பள்ளு

64. 'தர்க்கத்திற்கு அப்பால்' என்னும் சிறுகதையின் ஆசிரியர் யார் ?

(A) ஜெயகாந்தன்
(B) நாகூர்ரூமி
(C) கு. அழகிரிசாமி
(D) கு.ப. ராஜகோபாலன்

65. இந்திய தேசிய இராணுவப்படைத் தலைவராக இருந்தவர் யார் ?

(A) தில்லான்
(B) மோகன் சிங்
(C) இராஜாமணி
(D) ஜானகி

66. பொருத்துக.

I. குறிஞ்சி — a. நெல்லரிதல்
II. முல்லை — b. நிரை கவர்தல்
III. மருதம் — c. நிரை மேய்த்தல்
IV. பாலை — d. கிழங்கு அகழ்தல்

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | d | c | b | a |
| (B) | b | a | c | d |
| (C) | d | c | a | b |
| (D) | c | a | b | d |

67. 'இந்திய நீர்ப்பாசனத்தின் தந்தை' என அறியப்படுபவர் யார் ?

(A) சர் ஆர்தர் காட்டன்
(B) பென்னி குவிக்
(C) வெலிங்டன் பிரபு
(D) கானிங் பிரபு

Prepp Your Personal Exam Guide

68. "எருத்தேத்து நாகம்
ஏற்றிலைக் பாம்பு
கவிழ்த்திலை பருந்து
கவைக்கிலைக் பல்லி" — இது கூறுபவற்றின் எவற்றைக் குறிக்கும் சொற்கள். அவை கள் இடம்பெறும் நூல்

(A) கலிங்கத்துப்பரணி
(B) புறநானூறு
(C) பதிற்றுப்பத்து
(D) பரிபாடல்

69. 'புயலிலே ஒரு தோணி' என்னும் புதினத்தின் ஆசிரியர் யார் ?

(A) ப. சிங்காரம்
(B) சா. கந்தசாமி
(C) கி. ராஜநாராயணன்
(D) கு. அழகிரிசாமி

70. பகைவரை வென்றதைப் பாடும் இலக்கியம் எது ?

(A) பரணி
(B) அந்தாதி
(C) உலா
(D) பிள்ளைத்தமிழ்

71. பொதுமை வேட்டல் என்னும் நூலை எழுதியவர் யார் ?

(A) குலோத்துங்கன்
(B) மு.வ.
(C) திரு.வி.க.
(D) பாரதியார்

72. 'எருதுகட்டி' என்னும் மாடுதழுவுதலைப் பற்றிப் பதிவு செய்துள்ள பள்ளு இலக்கியம் எது ?

(A) முக்கூடற் பள்ளு
(B) கண்ணுடைய அம்மன் பள்ளு
(C) திருமலை முருகன் பள்ளு
(D) தென்காசிப் பள்ளு

73. அச்சில் வெளிவந்த அம்பேத்கரின் முதல் நூல் எது ?

(A) இந்தியாவின் தேசிய பங்கு வீதம்
(B) பண்டைக்கால இந்திய வணிகம்
(C) இந்தியாவின் சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும்
(D) ரூபாய் பற்றிய பிரச்சனை

Prepp
Your Personal Exams Guide

Prepp
Your Personal Exams Guide

89. பொருத்துக.

I. மதிய உணவுத் திட்டம் — a. எம்.ஜி.ஆர்
II. சத்துணவுத் திட்டம் — b. காமராசர்
III. திராவிட மகாஜன சங்கம் — c. அம்பேத்கர்
IV. ஒடுக்கப்பட்டோர் நல்வாழ்வுப் பேரவை — d. அயோத்திதாசர்

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | b | a | d | c |
| (B) | a | c | b | d |
| (C) | c | b | d | a |
| (D) | d | a | c | b |

90. கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய மொழிகள் ________ மொழியில் இருந்து பிரிந்து சென்ற கிளைமொழிகள் ஆகும்.

(A) சமஸ்கிருதம் (B) உருது
(C) தமிழ் (D) ஆங்கிலம்

91. குற்றியலுகரத்தின் வகைகள் எத்தனை ?

(A) 36 (B) 26
(C) 16 (D) 6

92. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது ?

(A) குலா (B) சீலா
(C) இலா (D) துலா

93. வஞ்சிப்பாவுக்குரிய ஓசை எது ?

(A) செப்பல் (B) துள்ளல்
(C) தூங்கல் (D) அகவல்

94. 'முகில்' என்பதன் பொருள் யாது ?

(A) மூங்கில் (B) மேகம்
(C) மலை (D) விண்மீன்

95. காட்டு முயலை வீழ்த்திய அம்பினை ஏந்துவதை விட ________ குறிவைத்துத் தவறிய வேலை ஏந்துவது பெருமை தரும் என்று குறள் கூறுகிறது.

(A) சிங்கம் (B) புலி
(C) கரடி (D) யானை

Prepp
Your Personal Exams Guide

96. பொருத்துக.

I. எழுத்துரு
II. அசை
III. இயைபுத் தொடை
IV. எழுத்துச் சீர்திருத்தம்

a. Reforming the letters
b. Rhyme
c. Syllable
d. Font

| | I | II | III | IV |
|---|---|---|---|---|
| (A) | d | c | b | a |
| (B) | a | b | c | d |
| (C) | c | d | a | b |
| (D) | b | a | c | d |

97. பொருந்தாததைத் தேர்வு செய்க.

(A) நீலகேசி
(B) சிலப்பதிகாரம்
(C) மணிமேகலை
(D) சீவகசிந்தாமணி

98. 'சங்கொலி' என்னும் நூலின் ஆசிரியர் யார் ?

(A) நாமக்கல் கவிஞர்
(B) பாரதியார்
(C) பாரதிதாசன்
(D) வாணிதாசன்

99. சுந்தரரின், 'திருத்தொண்டத் தொகையையும்' நம்பியாண்டார் நம்பியின், 'திருத்தொண்டர் திருவந்தாதியையும்' அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நூல் எது ?

(A) கந்த புராணம்
(B) நாச்சியார் திருமொழி
(C) பெரிய புராணம்
(D) நாலாயிர திவ்யப் பிரபந்தம்

100. பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால் அது __________ எனப்படும்.

(A) ஒற்றை வழக்கு மொழி
(B) இரட்டை வழக்கு மொழி
(C) சிறப்பு வழக்கு மொழி
(D) பொது வழக்கு மொழி